DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
Spl.S.C.No.3/2025
P.W.9

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சேக்கிழார் |
| Father's Name | : | திரு.தங்கவேலு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 51 |

(Accused is present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of December 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது தேசிய நெடுஞ்சாலை நிலம் எடுப்பு பிரிவில் திருச்சி பகுதியில் தனி வட்டாட்சியராக பணியில் இருக்கிறேன். இதற்கு முன்பு தொட்டியம் வட்டாட்சியராக பணியில் இருந்த போது முசிறி உட்கோட்ட காவல்துறை கண்காணிப்பாளர் வேண்டுகோளுக்கு இணங்க இந்த வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் ஆகிய கிருஷ்ணவேணி மற்றும் மனோகரன் மனைவி சீதா, பிரசன்னா மகள் முருகவேணி, சண்முகராஜா மகள் ரேணுகா ஆகியோர்களின் சாதி குறித்து வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் அளித்த அறிக்கையின்படி சான்று வழங்கினேன். இந்த வழக்கில் கண்ட நிகழ்நிலை புகார்தாரர் என்பவர் இந்து சக்கிலியர் எனப்படும் பட்டியல் வகுப்பைச் சார்ந்தவர் என்றும் மனோகரன் மனைவி சீதா, பிரசன்னா மகள் முருகவேணி ஆகிய இருவரும் இந்து பள்ளன் வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும், சண்முகராஜா மகள் ரேணுகா இந்து தேவேந்திரகுல வேளாளர் வகுப்பைச் சார்ந்தவர் எனவும் சாதி சான்றிதழ் வழங்கினேன். நான் வழங்கிய சாதி சான்றிதழ்

மெய்தன்மை சான்று **அ.த.சா.ஆ.4** ஆகும். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

என்னை காவல் துணை கண்காணிப்பாளர் என்று விசாரித்தார் என்று நினைவில்லை. 07.10.2024 அன்று அறிக்கை அனுப்பினேன். வருவாய் ஆய்வாளர் என்னிடம் இந்து பள்ளர் வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும், இந்து தேவேந்திரகுல வேலாளர் வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும் அறிக்கை தாக்கல் செய்தார்கள். அந்த அறிக்கையை நான் காவல் துணை கண்காணிப்பாளருக்கு கொடுத்தேன். அதையும் நான் 07.10.2024 அன்று தான் கொடுத்தேன். அந்த அறிக்கையை பார்வையிட்டால் அதன் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட நபர்களிடம் நான் நேரடியாக சாதி சான்றிதழ் வாங்கவில்லை. அவர்கள் வருவாய் ஆய்வாளரிடம் கொடுத்தார்களா என்பதை நான் உறுதிபடுத்தவில்லை. வருவாய் ஆய்வாளர் நேரடியாக விசாரணை செய்து அறிக்கை அனுப்பினார். பாதிக்கப்பட்ட நபர்கள் பட்டியல் வகுப்பை சேர்ந்தவர்கள் கிடையாது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Web Copy

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
Spl.S.C.No.3/2025
P.W.10

| | | |
|---|---|---|
| Name | : | திரு.தமிழ்செல்வன் |
| Father's Name | : | திரு.பொன்னன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 50 |

(Accused is present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of December 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது தொட்டியம் வட்டாட்சியராக பணியில் இருக்கிறேன். இதற்கு முன்பு ஸ்ரீரங்கம் வட்டாட்சியராக பணியில் இருந்த போது முசிறி உட்கோட்ட காவல்துறை கண்காணிப்பாளர் வேண்டுகோளுக்கு இணங்க இந்த வழக்கின் எதிரி தேவராஜ், த/பெ.கமலநாதன் என்பவர் கிறிஸ்துவ சோழிய வெள்ளாளர் எனப்படும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்தவர் என வருவாய் ஆய்வாளர் அறிக்கையின்படி சான்று வழங்கினேன். நான் வழங்கிய சாதி மெய்தன்மை சான்று **அ.த.சா.ஆ.5** ஆகும். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

வருவாய் ஆய்வாளர் கொடுத்த அறிக்கையை நான் காவல் துணை கண்காணிப்பாளருக்கு கொடுத்தேன். அந்த அறிக்கையை நான் 14.10.2024 அன்று கொடுத்தேன். அந்த அறிக்கையை பார்வையிட்டால் அதன் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரிதான். எதிரியிடம் நான் நேரடியாக சாதி சான்றிதழ் வாங்கவில்லை. எதிரி அவரது சாதி சான்றை வருவாய் ஆய்வாளரிடம் கொடுத்தாரா என்பதை நான்

**உறுதிபடுத்தவில்லை. வருவாய் ஆய்வாளர் நேரடியாக விசாரணை செய்து அறிக்கை அனுப்பினார். நான் இயந்திரதனமாக அறிக்கை வழங்கினேன் என்றும், சரியாக விசாரணை செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.